எம்.சி.ஓ.பி எண்: 2034/2022 தேதி: 14.07.2025

மசா. : 4

பெயர் :சந்திரமெளலி

த/பெ. : நாகபூஷணம்

வயது : 32

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 29 முதல்33 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் மனுதாரர் கேட்டுக்கொண்டதன் பெயரில் சாட்சி சொல்லவந்தேன். மசாஆ 31 ஆவணத்தின் அசல் எடுத்துவரவில்லை. இந்த ஆவணம் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் வேறு ஒரு கம்பெனியில் மே 2022 லிருந்து வேலை பார்க்கிறேன். நான் தாக்கல் ்செய்துள்ள மாசஆ 33 வங்கி கணக்கு விவரத்தில் எஸ்.ஏ.எஸ் பில்டர்ஸ்யிலிருந்து தொகை செலுத்துப்பட்டதற்கான குறிப்பு இல்லை எ்னறால் அங்கியிருந்துதான் வந்துள்ளது. ஆனால் நாட்கள் அதிகமானதால் பெயர் குறிப்பிடவில்லை. சம்பளம் என்ற குறிப்பு இல்லை என்றால் சரி. மற்ற வரவு செலவுகளில் பெயர் காணப்படுகிறது என்பதாலும், எவ்வளவு காலம் ஆனாலும் பெயர்களை நீக்கமாட்டர்கள் என்பதால் நான் அந்த நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை என்றாலும், எனக்கு அவர்கள் சம்பளம் தரவில்லை எ்னறால் சரியல்ல.மசாஆ 32 ஆவணத்தில் கம்பெனி சீல் மற்றும் கையொப்பம் இல்லை எ்னறால் சரி. தற்பொழுதுதான் இது பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. இரண்டுமாததற்கு முன்பு எடுத்தேன். நளினி இந்த பிரிண்ட் அவுட் எடுத்து தந்தார்கள். எந்த சிஸ்டத்திலிருந்து எடுத்து தந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த சம்பள சான்றிதழில் ஒருவருடத்திற்கு வங்கி கணக்கு விவரம்

உள்ளது என்றாலும், மற்றவற்றில் வங்கி கணக்கு விவரம் காணப்படவில்லை எ்னறால் சரிதான். நான் OT வேலை பாா்த்தால் சம்பளம் அதிகமாக வரும். மற்றும் போக்குவரத்து செலவுக்கான அலவன்ஸ் தருவார்கள். ஜீன் 2020 லிருந்து டிசம்பர் 2020 வரைக்கும் ஸ்பெசல் அலவன்ஸ் வாங்கியதாக குறிப்பு உள்ளது. வேலைக்கு போனதால்தான் சம்பளம். ஏப்ர் 2020 லிருந்து கொரானா காலத்தில் எந்த நிறுவனமும் நடக்கவில்லை என்றாலும் நான் OT பார்த்திருக்க வாய்பப்பு இல்லை எ்னறாலும் போக்குவரத்் ்து அலவசன்ஸ் கொடுக்க வாய்ப்பு இல்லை என்பதால் மசாஆ 32 ஆவணம் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் எ்னறால் சரியல்ல. நான் வேலை பார்த்திருந்தால் எனக்கு தனியாக சம்பள ரசீது வந்திருக்கும் என்பதால் , நான் வேலையை பார்க்கவில்லை என்றாலும் மனுதாரர் இந்த ஆவணத்தை தயாரித்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் அந்த நிறுவனத்தில் வேலை பாரக்கவில்லை என்றாலும், மனுதாரருக்கு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

X

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.